## இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் - 2013

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் அறிக்கை, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 26 புத்தசிராவக்க பிக்கு பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம் மற்றும் 2012 இன் 15 ஆம் இலக்க புத்தசிராவக்க பிக்கு பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தின் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு

உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப் பிரமாணம் 104(1), 104(3) மற்றும் 104(4) | 2012 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற வாகன விபத்தினால் ரூபா 94,765 ஆன நட்டம் இடம்பெற்றிருந்ததுடன், அதில் ரூபா 88,606 தொகை காப்புறுதி இழப்பீட்டின் கீழும் ரூபா 6,159 பல்கலைக்கழக நிதியத்திலிருந்தும் செலுத்தப்பட்டிருந்தது. விபத்திற்கு பொறுப்பான நபர்களை இனங்காண்பதற்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| 8.13.4 ஆம் பந்தி | அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் கல்விசார் பதவியணிக்காக வாகன கராஜ் ஒன்றை நிர்மாணிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியை விட 110 சதவீதத்தால் மிகைத்து ரூபா 137,812 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

**2.2.3 போதியளவு அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டுப்பாட்டு சபையின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 17 செலவின விடயங்களில் ரூபா 5,554,429 தொகையான மதிப்பீட்டை மிகைத்து செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் நிர்மாணங்களுக்குரிய மதியுரை நடவடிக்கைகள் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவின் மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்காக உடன்படிக்கை மேற்கொண்டு அதற்காக ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு மதியுரை சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கையில் அதற்கு மேலதிகமாக ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மதியுரை பொறியியலாளருக்கு மீளாய்வாண்டில் ரூபா 108,000 செலுத்தப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 1,496,395 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறையாக ரூபா 25,060,055 ஆக இருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினங்களுக்காக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 108,050,000 தொகையுடன் சுயமாக உழைத்த ரூபா 3,594,278 ஆன வருமானத்துடன், ஆண்டின் செலவினங்களை மேற்கொண்டதன் பின்னர் பற்றாக்குறை ரூபா 1,128,996 ஆக இருந்தது. அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 81,450,000 தொகையுடன் சுயமாக உழைத்த ரூபா 2,335,379 ஆன வருமானத்துடன், ஆண்டின் செலவினங்களை மேற்கொண்டதன் பின்னர் பற்றாக்குறை ரூபா 3,109,622 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்ட நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு ரூபா 34,446,367 தொகையும், பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான ஏற்பாடு ரூபா 1,981,813 தொகையுமாக மொத்தம் ரூபா 36,428,180 தொகையை பதிவழித்தமை மீளாய்வாண்டின் பற்றாக்குறைக்கு காரணமாக இருந்தன. அதற்கு ஒத்த முன்னைய ஆண்டில் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு ரூபா 19,971,416 தொகையும், பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான ஏற்பாடு ரூபா 21,950,433 தொகையுமாக பதிவழித்தமை முன்னைய ஆண்டின் பற்றாக்குறை அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பிக்க பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு ஆண்டிற்குமாக பதிவு செய்யப்பட்ட, கல்விகற்ற இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மற்றும் பட்டப்

படிப்பினை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை என்பன பின்வருமாறு காணப்பட்டது.

| **ஆண்டு** | **ஒவ்வொரு ஆண்டிலும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை** | **கல்வி கற்ற மாணவர்களின் எண்ணிக்கை** | **இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை** | **பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 2008 | 98 | 243 | 30 | 26 |
| 2009 | 63 | 264 | 88 | 49 |
| 2010 | 53 | 222 | 124 | 96 |
| 2011 | 93 | 200 | - | - |
| 2012 | 101 | 223 | 66 | 56 |
| 2013 | 101 | 276 | 50 | 41 |

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் போது கல்வி கற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று தென்பட்ட போதும், இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டப் படிப்பை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கையில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது

(ஆ) இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு ஆண்டினதும் மீண்டுவரும் செலவினம் மற்றும் ஒரு மாணவருக்கான கிரயம் என்பன பின்வருமாறு காணப்பட்டன.

| **ஆண்டு** | **மீண்டுவரும் செலவினம்** | **மொத்த மாணவர்களின் எண்ணிக்கை** | **ஒரு மாணவருக்கான கிரயம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | | **ரூபா** |
| 2008 | 51,033,645 | 243 | 210,015 |
| 2009 | 57,609,816 | 264 | 218,219 |
| 2010 | 58,211,952 | 222 | 262,216 |
| 2011 | 70,845,000 | 200 | 354,225 |
| 2012 | 88,874,619 | 223 | 398,541 |
| 2013 | 108,624,854 | 276 | 393,568 |

(இ) 2013 ஆம் ஆண்டில் விரிவுரை நடாத்துதல் தொடர்பாக செயன் முன்னேற்றம்

| | **விடயம்** | **திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாளங்கள்** | **நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்கள்** | **மேற்கொள்ளப்பட்ட விரிவுரை செயன் முன்னேற்றம் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| (i) | சிங்களம் | 360 | 302 | 84 |
| (ii) | கலாசாரம் | 330 | 160 | 48 |
| (iii) | ஆங்கிலம் | 330 | 266 | 81 |
| (iv) | கட்டாய ஆங்கிலம் | 990 | 821 | 83 |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | பௌத்த சித்தார்ந்தம்/ பாளி/ பௌத்த கலாசாரம் | 4110 | 3970 | 97 |

2013 ஆம் ஆண்டின் கலாசார பாடத்திற்குரிய விரிவுரைகளை நடாத்துதல் எதிர்பார்த்த அளவில் 48 சதவீத மட்டத்தில் காணப்பட்டன.

### 4.2 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கல்விசார் பதவியணியில் 08 பதவிகளிலும் கல்விசாரா பதவியணியில் 04 பதவிகளிலும் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) பல்கலைக்கழகத்தின் கல்விசாரா பதவியணிக்குரிய பதிவாளர் மற்றும் நிதியாளர் ஆகிய 02 பதவிகளுக்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து நிரந்தர ஊழியர்களை நியமிக்காமல் ஏனைய பல்கலைக்கழகங்களில் வருடாந்த விடுமுறை பெற்று, வருகை தருகின்ற உத்தியோகத்தர்களை தற்காலிகமாக நியமனம் செய்யும் போக்கு அவதானிக்கப்பட்டதுடன், பல்கலைக்கழகத்தின் செயற்திறனான நிர்வாகமொன்றை பராமரித்துச் செல்வதில் அது சிக்கலான நிலைமையொன்றாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) கல்விசாரா பதவியணியின் நிர்வாகமல்லாத பதவிகளுக்காக 2013 ஆம் ஆண்டின் கணனி உள்ளீட்டு உதவியாளர் II ஆம் தரத்தின் பதவிக்குரிய 05 உத்தியோகத்தர்களுக்குரிய ஆட்சேர்க்கும் நடைமுறைக்குப் புறம்பாக உயர் கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெயர்பட்டியலொன்றை அடிப்படையாகக் கொண்டு சேர்க்கப்பட்டிருந்தனர்.

### 4.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் நிருவாகக் கட்டிடத்தின் நிர்மாண ஒப்பந்தத்திற்குரிய ரூபா 68,062,631 ஆன மதிப்பீடு 2009 ஆகஸ்ட் 04 ஆம் திகதி நிர்மாண மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சின் நிலையியல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மதியுரைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், பொறியியல் கூட்டுத்தாபனத்தின் மதிப்பீட்டு விலையான ரூபா 87,030,584 தொகையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செலுத்தப்பட்டமையால் ரூபா 1,210,914 ஆன மதியுரைக் கட்டணம் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

உதவி உள்ளகக் கணக்காய்வாளரின் சேவை 2013 மே 27 ஆம் திகதி முதல் முடிவடைந்திருந்ததுடன், அத்திகதியிலிருந்து அப்பதவி வெற்றிடமாக இருந்தது. உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கான பதவியணியும் அங்கீகரிக்கப்படாமல்

இருந்தமையால் தற்போது நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வு திருப்திகரமான நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.2 ஆண்டறிக்கையினை சபைக்குச் சமர்ப்பித்தல்**

2010 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதி சபைக்கு சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை கணக்காய்வு திகதி வரை சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் தொடர்பாக நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான அறிக்கையின் மூலம் பல்கலைக்கழகத்தின் வண.மகோபாத்தியாய அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிருவாகம்
(ஆ) மனித வள முகாமைத்துவம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு